பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
15 06 2025 **SUNDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. ஐந்து நாள் பயணமாக, மூன்று நாடுகளுக்குச் செல்லும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது பயணத்தின் முதல்கட்டமாக இன்று சைப்ரஸ் புறப்பட்டுச் சென்றார்.

2. பாதுகாப்பு, தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் இருதரப்பு உறவை விரிவாக்கும் வகையில் தமது சைப்ரஸ் பயணம் அமையும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

3. உத்ராகண்ட்டில் இன்று நேரிட்ட ஹெலிகாப்டர் விபத்தில் விமானி உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

4. கடந்த நான்காண்டுகளில் பள்ளிக் கல்வியில் இடைநிற்றலே இல்லாத மாநிலமாக தமிழகம் உயர்த்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. பூட்டானில் நடைபெற்ற தெற்காசிய உடல் கட்டமைப்புத் திறன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Yajik Hillang** தங்கப்பதக்கம் வென்றார்.

**>>>>>><<<<<<**

ஐந்து நாள் பயணமாக, மூன்று நாடுகளுக்குச் செல்லும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது பயணத்தின் முதல்கட்டமாக இன்று சைப்ரஸ் புறப்பட்டுச் சென்றார்.

இந்தப் பயணத்தின் போது சைப்ரஸ் அதிபர் திரு. **Nikos Christodoulides** –ஐ சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

வர்த்தகம் மற்றும் முதலீடு, கல்வி, கடல்சார் ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பாக இந்த பேச்சுவார்த்தை அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எமது செய்தியாளரிடம் பேசிய அந்நாட்டுக்கான இந்திய தூதர் திரு. மனிஷ், இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்தும் வகையிலும், புதிய பரிமாணத்தை உருவாக்கும் வகையிலும் பிரமரின் சைப்ரஸ் பயணம் அமையும் என்று தெரிவித்துள்ளார்.

2047ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த இந்தியா என்னும் தொலைநோக்குப் பார்வையோடு, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு செயல்படுவது போன்று, 2035ஆம் ஆண்டை இலக்காக கொண்டு, சைப்ரஸ் அரசு முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக திரு. மனிஷ் கூறியுள்ளார்.

மத்திய தரைக்கடல் பிராந்தியம் உடனான இந்தியாவின் நட்புறவை மேம்படுத்தும் வகையில் பிரதமரின் சைப்ரஸ் பயணம் அமையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – செய்தியாளர் ராஜதுரை 84 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<<**

பாதுகாப்பு, தொழில்நுட்பம், வர்த்தக முதலீடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் இருதரப்பு உறவை மேலும் விரிவாக்கும் வகையில் தமது சைப்ரஸ் பயணம் அமையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சைப்ரஸ், கனடா, குரேஷியா நாடுகளுக்கு ஐந்துநாள் பயணம் மேற்கொள்ளும் அவர், தமது புறப்பாட்டுக்கு முன்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் சைப்ரஸ், மத்திய தரைக்கடல் பகுதியில் இந்தியாவின் முக்கியமான நட்பு நாடாக திகழ்கிறது என்று பிரதமர் கூறியுள்ளார்.

ஜி.7 உச்சிமாநாட்டில் பங்கேற்க கனடா செல்லும் பிரதமர், உலகளாவிய பிரச்சினைகள் மற்றும் தென்பிராந்திய நாடுகளின் முன்னுரிமைகள் குறித்து பரஸ்பரம் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் வகையில் அம்மாநாடு அமையும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

குரேஷியாவிற்கு செல்லும் முதலாவது இந்தியப் பிரதமர் என்ற பெருமையை தாம் பெறுவதாகவும், நமது பயணம் பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவை முன்னெடுக்கும் விதமாக அமையும் என்றும் திரு. நரேந்திர மோடி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எல்லை தாண்டிய தீவிரவாதம் தொடர்பான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு அந்நாடுகள் அளித்து வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கும் வாய்ப்பை இப்பயணம் வழங்கியிருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

உத்ராகண்ட்டில் இன்று நேரிட்ட ஹெலிகாப்டர் விபத்தில் விமானி உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

கேதார்நாத்திலிருந்து குப்த்காசிக்கு சென்ற இந்த ஹெலிகாப்டர், இன்று காலை கவ்ரிகுந்த் பகுதியில் விபத்துக்குள்ளானது.

விபத்து நேரிட்ட இடத்தில் தொடர்ந்து மீட்புப் பணிகளில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹெலிகாப்டர் முற்றிலும் எரிந்த நிலையில் கிடைத்திருப்பதாகவும், அனைத்து உடல்களும் மீட்கப்பட்டிருப்பதாகவும் அம்மாநில பேரிடர் மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள அம்மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தாமி, அவர்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று உறுதி அளித்துள்ளார்.

இதற்கிடையே, இந்த விபத்து தொடர்பாக விமான விபத்து புலனாய்வு அமைப்பு விசாரணை மேற்கொள்ளும் என்று சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

உத்தரபிரதேச மாநிலத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 60 ஆயிரத்து 244 காவலர்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று பணிநியமன ஆணைகளை வழங்குகிறார்.

லக்னோவில் நடைபெறும் இந்த விழாவில், அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் உட்பட பலர் பங்கேற்கின்றனர்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்களில் 12 ஆயிரத்து 48 பேர் பெண்கள் என்று உத்தரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

திரு. அமித் ஷாவின் வருகையை ஒட்டி லக்னோவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும், இந்த ஏற்பாடுகள் குறித்து திரு. யோகி ஆதித்யநாத் நேரில் ஆய்வு செய்ததாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

கடந்த நான்காண்டுகளில் பள்ளிக் கல்வியில் இடைநிற்றலே இல்லாத மாநிலமாக தமிழகம் உயர்த்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளப் பக்கத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், பள்ளி செல்லாத மாணவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும் என்று பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை மாணவர்களின் நலனுக்காக தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக திரு. மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோர் கல்வி அறிவு பெறும் வகையில், உல்லாஸ் எனப்படும் புதிய பாரத எழுத்தறிவு திட்டத்தினை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் நாகை மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் கல்வி பெற்ற 32 முதியோர்கள் இன்று தேர்வில் பங்கேற்பதாகவும், அவர்களுக்கு பள்ளி ஆசிரியர்கள் சிறப்பான வரவேற்பை அளித்ததாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட்- செல்வன் ஜெபராஜ் 44 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

சர்வதேச யோகா தினம் வரும் 21ஆம் தேதி கொண்டாடப்படவுள்ள நிலையில், அதனை வலியுறுத்தும் விதமாக நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, கர்நாடகாவின் மத்திய தகவல் தொடர்பு பணியகம் மற்றும் பிரம்மகுமாரிகள் அமைப்பு சார்பில் பெங்களூருவில் யோகா தின விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடத்தப்பட்டது.

நவீன வாழ்க்கை முறையில் மனஅழுத்தத்தை போக்க, யோகா முக்கிய பங்காற்றுவதாகவும், யோகா மற்றும் தியானம் செய்பவர்கள் உடல் மற்றும் மனவலிமையை பெறுவதாகவும் இதில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

**>>>>>><<<<<<**

இஸ்ரேல் – ஈரான் இடையேயான மோதல் 3வது நாளாக தொடர்ந்து வரும் நிலையில், இந்த மோதலில் அமெரிக்கா தலையிடவில்லை என்று அந்நாட்டு அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்கா மீது ஈரான் தாக்குதல் நடத்தினால், தனது முழுபலத்தை அமெரிக்கா பிரயோகிக்க நேரிடும் என்று எச்சரித்துள்ளார்.

ஈரான் – இஸ்ரேல் இடையேயான தற்போதைய மோதலுக்கு தம்மால் எளிதில் தீர்வு காண முடியும் என்றும் திரு. டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

**>>>>>><<<<<<**

பூட்டானில் நடைபெற்ற தெற்காசிய உடல் கட்டு சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Yajik Hillang** தங்கப்பதக்கம் வென்றார்.

திம்புவில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் 155 சென்டிமீட்டர் பிரிவில் இவர் முதலிடம் பிடித்தார்.

**>>>>>><<<<<<**

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

பெல்ஜியத்தின் **Antwerp** நகரில் நடைபெறும் ஆடவர் பிரிவு ஆட்டம், பிற்பகல் 2 மணிக்கு தொடங்குகிறது.

லண்டனில் நடைபெறும் மகளிர் பிரிவு ஆட்டம் பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

**>>>>>><<<<<<**

பெங்களூரு நெரிசல் சம்பவத்தை அடுத்து கிரிக்கெட் கொண்டாட்டம் தொடர்பான வழிகாட்டுதல்களை வடிவமைக்க குழு ஒன்றை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அமைத்துள்ளது.

**Devajit Saikia, Prabhtej Singh Bhatia, Rajeev Sukla** ஆகியோர் அடங்கிய இக்குழுவானது 15 நாட்களில் வழிகாட்டுதல்களை வடிவமைக்கும் என்று பிசிசிஐ தெரிவித்துள்ளது.

**>>>>>><<<<<<**

**Skopje** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் மானவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை தென்கொரியாவின் **Jonghoon Lim – Junsung Oh** இணையை இன்று எதிர்கொள்கிறது.

**>>>>>><<<<<<**

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் திருச்சி — திருப்பூர் அணியையும், நெல்லை — சேலம் அணியையும் எதிர்கொள்கின்றன.

**>>>>>><<<<<<**